# கச்சத்தீவுப் பிரச்சினையும் ஈழத்தமிழர் போராட்டமும்...



327
54054 93
KAL/PB

தோழர். எம். கல்யாணசுந்தரம்

# கச்சத்தீவுப் பிரச்சினையும் ஈழத் தமிழர் போராட்டமும்...

327.5405493 KAL
AR/PB
UNIVERSITY OF JAFFNA
ARCHIVES
Binding
NA

தோழர் **எம். கல்யாணசுந்தரம்** எம்.பி.
மத்திய நிர்வாகக் குழு உறுப்பினர்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

**சிவா பதிப்பகம்**
**சென்னை-94**

முதற்பதிப்பு—ஏப்ரல் 1985

KATCHA TEEVU PIRACCHINAIYUM
EEZHA THAMIZHAR PORAATTAMUM

By Com. M. KALYANASUNDARAM M. P.

தொடர்புக்கு :

'சிவா' பதிப்பகம்

18, சங்கரபுரம் 3வது தெரு
சூளைமேடு, சென்னை-600 094

முகவுரை

# களம் காணும் முன்

## தோழர் தா. பாண்டியன்

துணைச்செயலாளர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ் மாநிலக் குழு

இலங்கைத் தமிழர்கள் குடியுரிமை மொழியுரிமை கேட்டுத்தான் தொடக்கத்தில் போராடினர்.

வாக்குரிமை, குடியிருக்கும் உரிமை, மனித உரிமைகள் அனைத்தும் மறுக்கப்பட்டு, கோரிக்கைகளைக் கேட்கும் மக்களைக் கொன்று அடக்க ஜெயவர்த்தனே அரசு மிருகத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கிய பின்னர், தற்காப்புக்காக, தமிழ் பேசும் இலங்கை மக்களும் ஆயுதம் தேடத் தலைப்பட்டனர்.

ஜயவர்த்தனே அரசு தனது நாட்டுப் படைகளை மட்டும் வைத்து, தமிழ் பேசும் மக்களைக் கொன்று அழிக்கமுடியாது என்று கண்டு, அமெரிக்கா, இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி, இஸ்ரேல், போர்த்துக்கல், சீனா, தென்னாப்பிரிக்கா, தென் கொரியா ஆகிய நாடுகளின் ஆயுதங்கள், ராணுவ வீரர்களின் உதவியைப் பெறத் தொடங்கியது.

**அமெரிக்க ஏகாதிபத்தியம், இந்த இனக் கலவரத்தைத் தூண்டிவிட முதற்காரணமாக இருந்திருக்கிறது என்பது இப்பொழுது தெளிவாகிவிட்டது.**

இந்துமாக்கடலில் தனது கடற்படைத் தளங்களைப் பலப்படுத்திக் கொள்ள, இலங்கைத் தீவையும் தன் தளமாக ஆக்கிக் கொள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம்

தீட்டிய திட்டத்தின் விளைவுதான் படுகொலைகளுக்கே மூலகாரணமாகும் என்பது வெளிச்சமாகிவிட்டது.

இதை முதலில் தெரிந்து கொள்ள முடியாமல் இருந்த ஈழத் தமிழர்களும்கூட, இப்பொழுது அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒழிக என்று முழங்குமளவுக்குத் தெளிவு பெற்று விட்டனர்.

**உரிமைக்காகப் போராடும் எந்த மனிதனும், எந்த இனமும், எந்த நாடும், தனக்கு முதல் எதிரி அமெரிக்க ஏகாதிபத்தியமே என்பதைப் போராடும்போது புரிந்து கொள்வான்.**

இவ்வாறுதான் ஈழத்துத் தமிழ் இளைஞர்கள் தங்கள் எதிரி ஜெயவர்த்தனே மட்டும் அல்ல—அவனுக்குப் பின் பலமாக நிற்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம்தான் முதல் எதிரி என்று புரிந்து போர் முழக்கத்தை இப்பொழுது சரியாக எழுப்புகின்றனர்.

**எதிரியைத் தெரிந்து கொண்டதால், தங்களது லட்சியமும் சோஷலிசமே என்றும் தெளிவுடன் முழங்குகின்றனர்.**

வரலாறு தமிழ் பேசும் நம் சகோதரர்களைப் போர்க்களத்தில் சூடேற்றி, மெருகேற்றி, ஏகாதிபத்திய எதிர்ப்பு வீரர்களாக்கி நிறுத்தியுள்ளது. இது வடிக்கும் கண்ணீருக்கு இடையிலும், காணக் கிடைக்காத கண்கொள்ளாக் காட்சி.

உரிமைக்காகப் போராடி உயிரைப் பலி கொடுத்து, ஒரு பெரும் உண்மையைப் புரிந்து கொண்ட ஈழத்து இளைஞர்கள், கடல் கடந்து வந்து, வரும் முன் எதிரியைத் தெரிந்து கொள்ளுங்கள் என எச்சரிக்கிறார்கள். நம் மக்கள் புரிந்து கொள்ள முயலவேண்டும்.

அவர்கள் பட்டபாடு, அவர்கள் எழுப்பும் போர் முழக்கம் நம் மக்களைத் தட்டியெழுப்பி வருகிறது. இன்னும் அதிகமாக வேண்டும்.

தமிழ் பேசும் இலங்கைத் தமிழர்களைக் கொன்று தீர்க்க முயலும் கொடியவர்கள், நம் கடல் பகுதிக்குள் நுழைந்து நம் நாட்டு மீனவர்களைக் கொல்கிறார்கள். நம் நாட்டுப் படகுகளைப் பிடித்துச் செல்கிறார்கள். நம் நாடு நட்புக்காகத் தாரை வார்த்துத் தந்த கச்சத்தீவுக்கு நாம் வரக் கூடாது என்று தடை போடுகிறார்கள். போனால் சுடுகிறார்கள்.

இந்தியா போன்ற ஒரு பெரும் நாட்டினை இவ்வளவு அலட்சியமாகக் கருதி, அகங்காரத்தோடு நடவடிக்கை எடுக்க அந்தச் சின்னத் தீவுக்குத் துணிச்சல் வராது.

இந்தியாவை ஆத்திரமூட்டி இந்துமாக்கடலில் கலவரத்தை வளர்த்து, ஏதாவது பெயரில் கடற்படையோடு நுழையவும், இந்தியாவுக்கெதிராகத் தனது சதித் திட்டங்களை நிறைவேற்றவும்தான் அமெரிக்க ஏகாதிபத்தியம் இக்காரியங்களைச் செய்கிறது. தமிழ் நாட்டிலுள்ள சிலர் இதைப் புரிந்து கொள்ளாமல், ஒப்பந்தத்தின் தவறு என்றும், டில்லியின் பலவீனம் என்றும்,

**'அமெரிக்க ஏகாதிபத்தியத்தை விட டில்லி ஏகாதிபத்தியமே முதலில் முறியடிக்கப்படவேண்டியது'** என்றும் இன்றைக்கும் குழப்பிக் கொண்டு இருக்கிறார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விசுவாசமான இந்த மனிதர்களின் பேச்சைக்கேட்டு, தமிழ் மக்களும் உண்மை நிலை புரியாது குழம்பி நிற்கும்போது,

கச்சத்தீவு, பாக் ஜலசந்தி ஒப்பந்த விபரங்களைத் தெளிவு படுத்தி, படகுப் பேரணி ஏன் என்பதை விளக்கி, **தோழர் எம். கல்யாணசுந்தரம்** எழுதியுள்ள இச்சிறு நூல் **அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புக்குத் தரப்படும் கூர்வாளாகும்.**

இதைப் பயன்படுத்தித் தமிழ் மக்கள் தெளிவுபெற்றால், நம் நாட்டின் சுதந்திர உரிமையைப் பாதுகாக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பது தெளிவாகி விடும்.

ஐம்பதாண்டு பொது வாழ்க்கையின் செழுமைமிக்க அனுபவத்தோடும், மாற்றுக் கூற முடியாத நாட்டுப் பற்றோடும். முனை மழுங்காத, வளையாத, நெளியாத ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூர்மையோடும் அரசியல் பணி புரியும் பழைய சந்ததியின் முதிய தலைவர்களில் எஞ்சி யிருந்து வாழும் முதிய தலைவரான **எம். கே.** கூறுகிறார் என்றால், தமிழ் மக்கள், கூர்ந்து கேட்கவும் புரிந்து செயல்படவும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

எல்லை தாண்டி நுழையத் துடிக்கும் எதிரியை, முறி யடிக்க விரும்பும் வீரர்கள் இந்நூலைப் படிக்க வேண்டும். நண்பர்களைப் படிக்கச் செய்ய வேண்டும்.

இந்நூலை ***அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பில் உலகம் எங்கும் போராடி உயிர் நீத்து வரும் லட்சோப லட்சம் லத்தீன் அமெரிக்க, ஆப்பிரிக்க, வியத்னாமிய, பாலஸ்தீனிய, ஆப்கானிய, கம்ப்பூச்சிய வீரர்களுடன், தமிழ் ரத்தத்தையும் சேர்த்துப் பாய்ச்சி சிவக்க வைத்த ஈழத்து தமிழ்த்தியாக மறவர்கட்கு அர்ப்பணித்து இதனை வெளியிடுகிறோம்.***

இந்நூலின் விற்பனைப் பலன் முழுவதும் போராடும் தோழர்கட்கே போய்ச் சேரும்.

**போருக்கு உதவுங்கள்,**

**போராட வாருங்கள்.**

சென்னை-17 அன்புடன்,

26-3-85 தா. பாண்டியன்

# கச்சத்தீவுப் பிரச்சினையும் ஈழத்தமிழர் போராட்டமும்

இலங்கைத் தமிழர் பிரச்சினை இலங்கைக்கு உட்பட்ட இனக் கலவரம் என்று மட்டுமே முதலில் வர்ணிக்கப்பட்டிருந்தது. இன்றோ படிப்படியாக வளர்ந்து தெற்கே நமது நாட்டின் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்குமே அபாயத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடிய நிலை உருவாகியுள்ளது. சமீப காலத்து நிகழ்ச்சிகள் இதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

ராமேஸ்வரம் தீவை ஒட்டி இந்திய மீனவர்கள் தாக்கப்படுகிறார்கள். மீன் பிடிக்கச் செல்லும் படகுகள் கவிழ்க்கப்படுகின்றன. மீனவர்கள் கைது செய்யப்படுவதோடு படகுகளை இலங்கை ராணுவத்தினர் அவர்கள் நாட்டுக்கே எடுத்துச் செல்கின்றனர்.

நம்முடைய எல்லைக்குள் வந்து நமது மீனவர்களைச் சுட்டுக் கொன்று விட்டு அவர்கள் பிடித்த மீன்களையும் வலைகளையும் கடல் கொள்ளையடித்துச் சென்ற வண்ணம் இருக்கின்றனர்.

## சர்வதேச நீதிபதிகள் கமிஷனின் கண்டனம்

சமீபத்தில் நமது கரையோர ரோந்துப் படகுகள் தமிழ்நாட்டு மீனவர்களைத் தாக்க முயன்ற இலங்கை ராணுவத்தினரையும் அவர்களது படகுகளையும் பிடித்து வைத்திருந்து, பின்னர் பேச்சுவார்த்தை மூலம் ஏற்கனவே இலங்கையில் கைது செய்யப்பட்டிருந்த தமிழ் மீனவர்கள் விடுவிக்கப்படவும், பிடிபட்ட படகுகளைக் கொண்டு வந்து ஒப்படைக்கவும் ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னர்

இங்கு கைதாகியிருந்தவர்கள் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

இப்படி பாக் கடலில்-ராமேஸ்வரம் தீவை ஒட்டிய கடல் பகுதியில் மீனவர்கள் கொல்லப்படுவதும் தாக்கப் படுவதும் அதிகரித்து வருகிறது. இன்னொரு புறத்தில்—இலங்கை வாழ் தமிழர்கள் தற்போதைய ஜெயவர்த்தனே அரசால் வேட்டையாடப்படுகிறார்கள்.

நீதிபதிகளின் சர்வதேசக் கமிஷனே இவைகளை நேரில் பார்த்து விபரங்களைச் சேகரித்து ஒரு அறிக்கையின் மூலம் இலங்கை அரசுக்குக் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

'வன்முறைக்கோ-பயங்கரவாதத்திற்கோ சம்பந்தப் படாத அப்பாவித் தமிழர்கள் தான் பிரதானமாக இலங்கை அரசின் தாக்குதலுக்குப் பலியாகிறார்கள்.

'பெரும்பான்மையாக உள்ள சிங்கள மக்களுக்கு மட்டுமின்றி நாட்டில் உள்ள அனைவரையும் சமமான முறையில் பாதுகாக்கக் கூடிய அரசாக தற்போதைய ஜெயவர்த்தனே அரசு அனைத்து மக்களின் பிரதிநிதியாக செயல்படவேண்டும்'.

'இனக் கலவரத்தையும், பாதுகாப்புப் படையின் வன்முறையையும் அரசியல் அராஜகத்தையும கட்டுப் படுத்த தற்போதைய அரசால் இயலவில்லை'.

மேற்கண்ட உண்மைகளை ஆதாரத்துடன் வெளியிட்டிருக்கும் சர்வதேச நிதிபதிகள் கமிஷன் இலங்கை அரசின் அடிப்படையான உள்நோக்கத்தைப் பகிரங்கமாக அம்பலப்படுத்தியுள்ளது. ராணுவ பயங்கரத்தைப் பரப்பி இனக் கலவரத்தை மூட்டி விட்டு அந்த தீவில் ஊரடங்கு உத்தரவையும், அவசர கால நிலையையும் பிறப்பித்துப் பதட்ட நிலையை உருவாக்குவது ஒரு கொள்கையாகிவிட்டது.

'தற்போதைய தமிழர்கள பிரச்சினையை ராணுவ ரீதியாகவே தீர்க்கலாம் என்பதே இலங்கை அரசின் அதிகாரப்பூர்வமான கொள்கை என்கிற சந்தேகத்திற்கு ஜெயவர்த்தனே அரசு நம்மை இட்டுச் செல்கிறது'.

## கச்சத்தீவு பற்றிய ஒப்பந்தம்

இலங்கைத் தமிழர் பகுதியில ஆரம்பித்த பதட்ட நிலையும், மோதலும் தற்போது தமிழ் நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையேயுள்ள கடல் பகுதியில் அதிகரித்து வருகிறது.

பாக் கடல் சம்பந்தப்பட்ட மட்டில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே 1974 ஆம் ஆண்டு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தைப் பற்றி அதன் ஷரத்துக்களை நாடாளுமன்றத்தில் அன்றைய அயல் துறை அமைச்சரான சர்தார் சுவரன்சிங் சமர்ப்பித்து உரையாற்றினார். கச்சத்தீவைப் பற்றி அவர் தன்னுடைய முன்னுரையில் கூறியதாவது-

''பாக் ஜலசந்தியில் உள்ள கச்சத்தீவு முக்கால் சதுர மைல் அளவுள்ளதாகும். இது இந்தியக் கடற்கரையில் இந்தத் தீவுக்கு மிக அருகாமையில் உள்ள இராமேஸ்வரத்திலிருந்து 10·5 மைல் தூரத்தில் உள்ளது. ஸ்ரீலங்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பாக் ஜலசந்தி 18 மைல் விரிவுள்ளதாகும். பாக் ஜல சந்தியின் நுழைவுப் பாதை (வேதாரண்யத்திலிருந்து யாழ்ப்பாணம்) சராசரி 28 மைல் விரிவுள்ளதாகும். ஸ்ரீலங்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில்உள்ள கச்சத்தீவு குறித்த உரிமைக் கோரிக்கையைத் தீர்மானிப்பது இந்தியாவுக்கும் ஸ்ரீலங்காவுக்கும் இடையில் உள்ள பாக் ஜலசந்தியின் தண்ணீர் பகுதியின் மீதுள்ள உரிமையின் அடிப்படையில் தீர்மானிப்பதாகும்.''

..." சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பாக் ஜலசந்தியின் நீர்ப்பகுதியின் மீதுள்ள கப்பல் போக்குவரத்தின் பாதைகளின் எல்லையை அடிப்படியாகக் கொண்டுஉடனடியாக தீர்வு காணப்பட வேண்டியுள்ளது. இரு தரப்பின் வரலாற்றுச் சாட்சியங்களையும் சட்ட நடைமுறைகளையும் முன் மாதிரிகளையும் நம் இரு நாடுகளுக்கிடையில் வளர்ந்து வரும் நட்புறவு பின்னணியிலும் தீர்க்கப்பட வேண்டியுள்ளது. கச்சத்தீவு எப்பொழுதுமே குடியிருப்பு இல்லாது இருந்த தீவாகும். இந்தியாவோ இலங்கையோ அங்கு நிரந்தரமாக இருந்தது இல்லை."

"...காலனி ஆட்சி இருந்த போது கச்சத்தீவு இந்தியாவுக்குச் சொந்தமா? இலங்கைக்குச் சொந்தமா? என்பது அடிக்கடி அன்றிருந்த அரசாங்கங்களிடையே விவாதிக்கப்பட்டு வந்தது. இரு தரப்பாரும் கோரிக்கைகளையும் எதிர் கோரிக்கைகளையும் வைத்து வந்தனர்.

அண்மைக் காலத்தில் கச்சத்தீவின் உரிமை நிலை தீர்மானிக்கப்படாது இருக்கும் நிலை குறித்து எந்த ஒரு நாடும் தன்னிச்சையாக நடவடிக்கை எடுத்து விடக் கூடாது என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

அவ்வாறு இறுதியாகத்தீர்மானிக்க இருதரப்பும் சுமுகமான-வரலாற்று ரீதியான முயற்சிகளை வரலாற்று ஆவணங்களைப் பாரபட்சமற்று ஆய்வதின் மூலமும் சட்டக் கோட்பாடுகளை மனத்தில் கொண்டும் பிரச்சினைகளை அமைதி வழியில் தீர்ப்பது என்ற நம் நாட்டின் கொள்கைகளை மனத்தில் கொண்டும் தீர்மானிக்க வேண்டும்...

பாக் ஜலசந்தியில் கப்பல் போக்குவரத்து எல்லை சம்பந்தமாக நாம் செய்துள்ள ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் சமமானதும் நியாயமானதுமாகும்.

"இந்த ஒப்பந்ததை நாம் உறுதி செய்கிறபோது மீன் பிடிக்கும் உரிமை, பண்டிகைக்கான சுற்றுலா, கப்பல்

போக்குவரத்து போன்ற உரிமைகள் கடந்த காலத்தில் இரு நாடுகளுக்கும் இருந்தது வருங்காலத்திற்கும் உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு அங்கத்தினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென நினைவுறுத்துகிறேன். வரலாற்று ஆராய்ச்சியில் கிடைத்த தடயங்களும் நம் நிபுணர்கள் தந்த இதர ஆதாரங்களும் கச்சத்தீவு சம்பந்தமாகக் கிடைத்த அனைத்து சாட்சியங்களும்-அதாவது-தமிழ்நாடு-கோவா, பம்பாய் போன்ற மாநிலங்களிலும் பிரிட்டன், டச்சு நாடுகளில் கிடைத்த ஆதாரங்களையும் அடிப்படையாகக் கொண்டு இந்த ஒப்பந்தத்தை செய்துள்ளோம்.

நம் இரு நாட்டு மூத்த அதிகாரிகளும் கடந்த ஆண்டு இந்த ஆதாரங்களையெல்லாம் மிக நன்கு ஆராய்ந்து கருத்துக்களை வெளியிட்டு முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

கச்சத்தீவு என்ற இந்தப் பிரச்சினை நான் ஏற்கனவே விளக்கியபடிக் கப்பல் போக்குவரத்துக்கான தண்ணீர் எல்லை சம்பந்தமான ஒன்றாகத்தான் பரிசீலிக்கப்பட வேண்டியது அவசியமாயிற்று.

''இது வருங்காலத்தில் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தண்ணீரில் இத்தகைய பிரச்சினைமேலும் வரவிடாமல் நீக்குவதற்காக இது செய்யப்பட்டது மேலே கூறிய அடிப்படையில் இந்திய மீனவர்களும், யாத்ரீகர்களும் கச்சத்தீவுக்குப் போய் வருவதற்குள்ள இதுவரை பெற்றிருந்த உரிமைகளினைத் தொடர்ந்து அனுபவிப்பார்கள்.

''எனவே போக்குவரத்து அனுமதி ஆவணங்களையோ-அல்லது விசா போன்றவற்றையோ வேண்டுமென ஸ்ரீலங்கா அரசு கோர முடியாது. *(பிரிவு 5)*

''ஸ்ரீலங்கா-இந்தியக் கப்பல்கள் இதுவரைபாரம்பரியமாக அனுபவித்து வந்த எல்லா உரிமைகளையும் தொடர்ந்து அனுபவிப்பார்கள். *(பிரிவு 6)*

இதுவரை என்னென்ன உரிமைகள் இருந்து வந்ததோ நம்முடைய படகுகள் அந்தப் பக்கம் செல்வதற்கும், அந்தப் பக்கத்திலிருகது இந்தப் பக்கம் வருவதற்கும் கச்சத்தீவு பயன்படுத்தப்படுவதற்குரிய அந்த உரிமைகள் பாதுகாக்கப் பட்டிருக்கின்றன என்பது இந்த ஒப்பந்தத்திலிருந்து ஏற்படுகின்றது.

நமக்கு எந்தவித ஒட்டும் உறவும் இல்லாது கச்சத்தீவை அவர்களுக்கே கொடுத்து விட்டதாகக் கூறுவதற்கு இடமே கிடையாது. அதற்குப் பதிலாக மாமூலமாக இருந்த உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## கச்சத்தீவு தகராறுகளுக்குக் காரணம் என்ன ?

அவ்வாறு இருந்தும் இப்பொழுது நம்முடைய படகுகள் கச்சத்தீவை நெருங்க முடியவில்லை மீனவர்கள் அங்கு செல்ல முடிவதில்லை. தொடர்ந்து தாக்கப்படுகிறார்கள் கடந்த நான்கு ஆண்டு காலமாக இத் தாக்குதல் அதிகரித்து வருகிறது.

ஆரம்பத்தில் நான் எடுத்துக் காட்டியதைப் போல இது மீன் பிடிப்பதை ஒட்டி வருகிற தகராறு அல்ல. இந்தியாவுக்கு எதிராக நடத்துகின்ற இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளில்–இந்தியாவை ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் இது ஒன்றாகும்.

கச்சத்தீவு பற்றிய ஒப்பந்தம் இரண்டு நாடுகளுக்கிடையே உள்ள பரஸ்பர ஒத்துழைப்பை வளர்ப்பதற்கு ஏற்பட்ட ஒரு உதாரணமாக இருக்கக் கூடியது என்பதே என்னுடைய கருத்து.

இந்த ஒப்பந்தத்தின் சரத்துகளை இந்தியாவிலேயே சிலர் புரித்து கொள்ளாத காரணத்தால் கச்சத்தீவைத் தாரை வார்த்து விட்டோம் என்று திரும்பத் திரும்பக் கூறி இலங்கை அரசுக்கே அந்த அபிப்பிராயத்தை வளப்படுத்துவதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்தி வருகிறார்கள் என்றே

நான் கூற வேண்டியுள்ளது. கச்சத்தீவை இலங்கைக்கு ஒப்பந்தத்தின்படியும் தாரை வார்த்துவிடவில்லை. நடைமுறையிலும் தாரைவார்க்கவில்லை. கச்சத்தீவு சம்பந்தமான தகராறு இந்த நான்காண்டு காலமாகத்தான் குறிப்பாக 1978ல் ஏற்பட்டது. எப்படியெனில் நான்காண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டில் காலரா இருப்பதாகவும், அந்தக் காலராவுடன் கச்சத்தீவுக்கு வரக்கூடாது என்றும் போலிக் காரணத்தைக் கூறி இலங்கை அரசு தமிழ்நாட்டு மீனவர்களைத் தடுத்து விட்டது. அதை எதிர்ந்து தடையை உடைப்பதற்குப் பதிலாக அன்றைய மத்திய ஜனதா அரசு மௌனமாக இருந்துவிட்டது. இந்த மௌனம் மத்திய அரசின் குற்றமே என்று நாம் குறை கூற வேண்டியிருக்கிறது.

கச்சத்தீவுக்குச் சென்று வியாபாரம் செய்ய அல்லது அங்கு நடைபெறும் திருவிழாவில் மக்கள் கலந்து கொள்ள படகு சர்விஸ் நடத்தி ஏராளமாக வசூலித்து ஏகபோகமாக அனுபவித்துக் கொண்டிருந்த ஒரு சிலர் தமக்கு வரக்கூடிய போட்டியைக் கெடுப்பதற்காகச் சொல்லப்பட்ட போலிக் காரணமே காலரா பற்றிய செய்தி. ஏகபோகமாக படகு சர்விஸ் நடத்திக் கொண்டிருந்தவர்கள் எட்டப்பர்களாகி விட்டனர்.

ஆகவே கச்சத்தீவு பற்றியோ — பாக் கடலில் நாம் மீன் பிடிப்பது பற்றியோ தகராறுகளுக்கு இடமில்லை. இந்தத் தகராறுகள் அடிப்படையில் ஒப்பந்தத்தால் அல்ல. வேறு காரணங்களால்தான் ஏற்படுகிறது. அந்தக் கரையில் உள்ள தமிழர்களுக்கும் இவர்களுக்கும் தகராறு கிடையாது. ஈழத்துக் கரையிலே இருக்கக் கூடிய மீனவர்கள் தங்களுடைய பிரிவிலே மீன் பிடித்துக் கொண்டதாக ஆட்சேபனை தெரிவித்ததோ எதிர்ப்பு காட்டியதோ கிடை, யாது. அப்படி ஒரு மோதல் இது வரை ஏற்பட்டதில்லை. இரண்டுபேரும் பரஸ்பர ஒத்துழைப்போடு தொழில் நடத்தி வந்திருக்கிறார்கள். 1974ஆம் ஆண்டு ஏற்பட்ட

இந்த ஒப்பந்தத்திற்குப் பிறகு 1978 வரை கூட கச்சத் தீவை நமது மீனவர்கள் அனுபவித்து வந்திருக்கிறார்கள்.

1977ல் திருமதி பண்டார நாயகாவின் அரசு கவிழ்ந்து ஜெயவர்த்தனேயின் தலைமையில் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி பொறுப்பை ஏற்றது. இலங்கையில் ஏற்பட்ட இந்த அரசியல் மாற்றம் தான் இந்த விளைவுகளை ஏற் படுத்தியிருக்கிறது.

என்ன அந்த அரசியல் மாற்றம்?

இந்த ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்தில் இருந்த இந்திய அரசும், இலங்கை அரசும் நட்புறவோடு இருக்கவேண்டும் என்று விரும்பிய அரசுகள், இலங்கையில்திருமதிஸ்ரீமாவோ பண்டாரநாயகாவும், இந்தியவில் திருமதி இந்திரா காந்தியும் அப்பொழுது ஆட்சிப் பொறுப்பிலே இருந்தார் கள்.

திருமதிபாண்டார நாயகா தோற்கடிக்கப்பட்டு ஜெய வர்த்தனேயின் ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையில் ஆட் சிக்கு வந்த பிறகு அரசியலில் புதிய மாற்றம் தொடங்கு கிறது. அரசு நேரடியாகத் தூண்டுவதின் மூலம் ஏற்பட் டது. அதற்குப்பிறகுதான் தமிழர்களுக்கு எதிரான இனப் படுகொலை என்கிற வரலாற்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் இந்த ஒப்பந்தத்தின் இன்னொரு முக்கியமான அம்சம் என்னவென்றால் பாக் கடல் சம்பந்தப்பட்ட மட்டில் கடலுக்கு அடியில் இருக்கிற இயற்கை வளங்களை ஒரு வேளை எண்ணெய் ஊற்று தென்பட்டாலும் சரி— வேறு கனிப் பொருட்கள் தென்பட்டாலும் சரி—அவை களைப் பயன்படுத்துவதில் இந்தியாவோ அல்லது இலங்கையோ அவரவர் இஷ்டப்படி செய்யாமல் இருவரும் கலந்து பேசி பயன்படுத்த வேண்டும் என்கிற ஒரு ஒப்பந்த அம்சமும் உண்டு. இதில் மூன்றாவது நாடு

பிரவேசிக்க முடியாது. இரண்டு நாடுகளின் பரஸ்பர ஒத்துழைப்புக்கு ஒரு உதாரணம் இந்த ஷரத்து.

அந்த இயற்கை வளங்களை இரண்டு நாடுகளின் பரஸ்பர நன்மைக்காகப் பயன்படுத்தக் கூடிய ஒரு பாதுகாப்பான உடன்படிக்கை அது. இத்தகைய உடன் படிக்கையை அதன் பெருமையைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாத காரணத்தால் அது பற்றி நாம் அர்த்தப்படுத்திய முறையானது ஜெயவர்த்தனே அரசு தனக்கு அந்த உடன்பாட்டைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கும், தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கும் உபயோகமாகி வருகிறது என்று எண்ண வேண்டியுள்ளது.

## பிரகடனம் செய்யப்படாத ஒரு யுத்தம்

பாக் கடலில் ஒரு பகுதியை—அதாவது அவர்களது கரையோரப் பகுதியைப் பாதுகாப்பு மண்டலம் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது. தரையிலும் பாதுகாப்பு மண்டலம். கடலிலும் பாதுகாப்பு மண்டலம்.

அவர்கள் நாட்டில் தொடர்ந்து அவசர நிலை நீடிக்கிறது. அமைதி மண்டலமாக இருந்த கடல் பகுதியையும், இலங்கைத் தமிழர் வாழும் பகுதியையும் ஏதோ கலவரப் பகுதி போன்று சித்தரித்துத் தற்காப்பு மண்டலம் என்று சொல்லி தன்னுடைய ரோந்துப் படகுகளைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது. வேவு பார்க்கும் கருவிகளைக் கூட அமைத்திருக்கிறது.

இவைகளையெல்லாம் பார்க்கிறபோது இலங்கை உள் நாட்டு விவகாரமாக இருந்து இலங்கையில் இருக்கக் கூடிய ஈழத்துத் தமிழர்களுக்கு எதிராக நடந்து வந்த இனக் கலவரம் 1971-ல் தொடங்கி இப்போது இந்தியாவுக்கு எதிராகவே பிரகடனம் செய்யப்படாத ஒரு யுத்தத்தை இலங்கை அரசு தொடங்கியிருக்கிறது. அதனால்தான் அது இந்திய மீனவர்களைத் தாக்குகிறது.

தாக்கப்படுவது மீனவர்கள் தானே என்று நினைக்க வேண்டாம். தாக்கப்படுகிற மீனவர்கள் அத்துமீறி இலங்கையின் பாதுகாப்பு எல்லைக்குள் சென்றதால்தான் தாக்கப்பட்டார்கள் என்று நினைக்க வேண்டாம். ஒவ்வொரு மீனவனைத் தாக்குவதும் இந்தியாவையே தாக்குவதற்கு ஒப்பாகும். இலங்கை அரசினுடைய போக்கு இந்தியாவின் உரிமைக்கும், நமது ஆதிபத்தியத்திற்கும் விடப்படுகிற சவாலாகும்.

இலங்கை ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறது என்பதையும், அதற்குப் பின்னணியில் ஏற்பட்டு வருகிற நிலையையும் பார்க்கலாம். பலமான மார்க்கெட் பொருளாதார நோக்கத்தோடும் அன்னிய மூலதனத்திற்கும், இறக்குமதிகளுக்கும் முழுமையாக கதவு திறந்துவிடும் தன்மையோடும் 1977-ல் ஜெயவர்த்தனே ஆட்சிக்கு வந்தார்.

1977-ல் தமிழர்களுக்கு எதிராகக் கலகம் ஏற்பட்டது.

1981-ல் கலவரம் ஏற்பட்டது. யாழ்ப்பாணத்தில் 95 ஆயிரம் புத்தகங்கள் கொண்ட மிகப் பெரிய நூலகம் உட்பட பல சேதாரங்கள் விளைவிக்கப்பட்டன.

1983-ல் கலவரம் ஏற்பட்டது. அப்போது தொடங்கிய கவவரம் இன்றுவரை ஓயவில்லை. இவைகள் எல்லாம் வெறும் இனக் கலவரம் மட்டும்தானா?

## இனக் கலவரம் அல்ல, இன ஒழிப்பு

இனக் கலவரம் என்றால் என்ன என்று நமக்கும் தெரியும். ஏனெனில் இந்தியாவிலும் வகுப்புக் கலவரங்கள் ஏற்படுவதுண்டு. ஆனால் இத்தகைய கலவரம் ஏற்படும்போது இரண்டு மதத்தைச் சேர்ந்த மக்கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளவும், போலீஸ் சென்று அதைத் தடுக்கவும், பாதுகாக்கவும் முயலும் சம்பவங்களைப் பார்க்கிறோம். அவ்வாறு போலீஸ் தடுக்காவிட்டால்

மக்களின் கிளர்ச்சி அதை ஒழுங்குபடுத்திப் போலீஸ் நடவடிக்கையை மாற்றிப் பாதுகாப்பிற்கு வழி வகுக்க வைக்கிறது. அப்படிப்பட்ட இனக் கலவரமா இலங்கையில் ஏற்படுகிறது? இல்லை.

இலங்கையில் சிங்கள மக்கள் அனைவரும் திரண்டு வந்து தமிழ் மக்களைத் தாக்குவதாக நினைக்க வேண்டாம், இலங்கை அரசு ராணுவத்தை வைத்துக்கொண்டு ஈழத்துத் தமிழ்ப் பகுதியில் வசிக்கின்ற மக்களை—குறிப்பாக இளைஞர்களை அடக்குவது ஒடுக்குவது என்று ஆரம்பித்து, அவர்களை அங்கிருந்து வெளியேற்றி விட்டு—இலங்கை பூராவையுமே சிங்களவர்கள் மெஜாரிட்டியாக இருக்கக்கூடிய ஒரு நாடாக மாற்றுவதற்குள்ள திட்டத்தின் தொடக்கமே இந்த இனக் கலவரமாகும்.

தமிழர்கள் மெஜாரிட்டியாய் உள்ள பகுதி வடக்கேயும் கிழக்கேயும் ஆகும். இந்த மெஜாரிட்டி, இலங்கையில் ஜெயவர்த்தனே அரசுக்குச் சாதகமாக இருப்பார்களா என்பது சந்தேகம்.

இதில் புரிந்து கொள்ள முடியாத ஒரு விபரீதம் என்னவென்றால் இந்தத் தமிழர்களுக்குப் பிரதிநிதிகள் என்று இருக்கக்கூடிய தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிஆரம்ப காலத்தில் ஜெயவர்த்தனே அரசோடு மோதல் என்ற பாதையில்போகவே இல்லை. திரு அமிர்தலிங்கம், திரு சிவசிதம்பரம் போன்றவர்களின் தலைமையில் உள்ள இந்த அமைப்பு மோதல் பாதையில் சென்றதால்தான் கலவரம் ஏற்பட்டது என்று குற்றம் சாட்ட முடியாது.

இவர்கள்தான் தமிழ்ப் பிரதேசத்தில் எல்லா இடங்களிலும்நாடாளுமன்றத்தைக் கைப்பற்றி பிரதான எதிர்க்கட்சியாக அமர்ந்தவர்கள். அவர்கள் ஜெயவர்த்தனேயின் கட்சியோடும் ஆட்சியோடும் மோதிக் கொள்ளாதது

மட்டுமல்ல, வேறு எந்த எதிர்க் கட்சிகளையும் ஆதரித்த வரலாறு இல்லை. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து அணி வகுத்து ஜெயவர்த்தனேவின் கட்சிக்கோ-ஆட்சிக்கோ எதிராகப் போராடிய ஒரு சம்பவத்தைக் கூட காட்ட முடியாது. அப்படி இருந்தும் தமிழர்களுக்கு எதிராக ஜெயவர்த்தனே அரசு ஏன் இப்படிப் போகிறது என்பதுதான் புரிந்து கொள்ள முடியாத ஒரு விசித்திரமாய் இருக்கிறது. அதற்கு ஏதாவது காரணங்கள் இருக்க வேண்டுமல்லவா?

அதே போன்று இந்திய வம்சாவளி என்று கூறக் கூடிய மலைத் தோட்டத் தொழிலாளிகள் இன்னும் பல லட்சக் கணக்கானவர்கள் அங்கேயே நாடற்றவர்களாக இருக்கிறார்கள். அந்த நாடற்ற இந்திய வம்சாவளியினருக்கு—உரிமையற்ற இந்திய வம்சாவளியினருக்குத்தலைவராக இருப்பது தொண்டமான் ஆகும். அவரது தலைமையில் உள்ள அமைப்புக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்று பெயர். அவர் அங்கு அமைச்சராகவே இன்றும் தொடர்ந்து நீடிக்கிறார்.

மலைத்தோட்டத் தொழிலாளிகள் ஈழத்துத் தமிழர்களுடன் சேராமலிருந்தால்தான்-தனியாக இருந்தால்தான்—பாதுகாப்பு என்று சொல்லி அவர்களைத் தனிமைப் படுத்தியே வைத்திருக்கிறார்கள். இவ்வளவு இனப் படுகொலை நடக்கிற காலத்தில் கூட அவர் மந்திரி சபையில் நீடித்து கொண்டுதான் இருக்கிறார். ஆகவே தமிழர்களோ தமிழர்களுடைய கட்சிகளோ அரசுக்கு எதிராகவோ சிங்களர்களுக்கு எதிராகவோ போனதாக வரலாறு இல்லை. அதற்குப் பதிலாக மாநில சுயாட்சி வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார்கள். ஆயினும் ஜெயவர்த்தனே அரசு அதையும் நிராகரித்து, இலங்கை முழுவதையும் தன் வசப்படுத்திக் கொண்டு ஒரு பதட்ட நிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பதை ஆராய வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு ஏற்பட்டுள்ளது.

## ஏகாதிபத்திய ஊடுறுவலே காரணம்

இதற்கு முன்னர் இப்படி தொடர்ச்சியாக இனக் கலவரங்கள் ஏற்பட்டதில்லை. இப்போது இக்கலவரம் கட்டு மீறிப்போய்க் கொண்டிருப்பதற்கும், ராணுவத்தின் அராஜகம் எல்லைமீறிப் போவதற்கு ஆயுதம் தாங்கிய போராட்டமாக மாறுவதற்குக் காரணம் ஏகாதிபத்தியத்தின் ஊடுறுவலே என்று நாம் கருதவும், கூறவும் வேண்டியுள்ளது.

இலங்கைப் பிரச்சினையை இந்துமாக்கடலில் ஏற்பட்டுள்ள அபாயத்திலிருந்து பிரித்துப் பார்க்கக் கூடாது. இந்துமாக்கடலில் ஆதிக்கம் செலுத்த அமெரிக்க ஏகாதிபத்தியம் விரும்புகிறது. இந்துமாக்கடலில் பல இடங்களில் அமெரிக்கா தன்னுடைய தளத்தை அமைத்திருக்கிறது. குறிப்பாகக் கூறுவதென்றால் டிகோகார்சியாவில் அணு ஆயுதங்களை எடுத்துச் செல்லக்கூடிய கப்பல்களையும் ஏவுகணைகள் தாங்கிய நீர்மூழ்கிக் கப்பல்கள் உட்பட விரைந்து சென்று தாக்கும் பலம் பொருந்திய படைகள் அனைத்தையும் ஏராளமாக அங்குப் பெருக்கி வருகிறது.

டிகோகார்சியாவிலிருந்து எந்த இலக்கையும் வெகு விரைவிலே சென்று தாக்க முடியும். விரைவுப் படைகளை மூன்று மணி நேரத்திற்குள் எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லலாம். எனவேதான் ராணுவ தளங்களை இந்துமாக்கடலில் பெருக்கவும் பலப்படுத்தவும் அமெரிக்கா செயல்பட்டு வருகிறது.

இதை உலக சமாதான சக்திகள் ஒன்று சேர்ந்து கண்டித்தன. இந்துமாக்கடலை அமைதிமண்டலமாக்க வேண்டும் என்ற கோரிக்கையைக் கிளப்பியது இந்தியா. அதில் முன்னணியில் நின்று வருகிறது. அப்போதைய இலங்கை அரசும் இந்தியாவுடன் இப்பிரச்சினையில் இணைந்து நின்றது.

* 1974 ஆம் ஆண்டு இந்துமாக்கடல் அணு ஆயுதங்களற்ற அமைதி மண்டலமாகப் பிரகடனம் செய்யப்பட வேண்டும் என்று திருமதி பண்டாரநாயக்கா கோரிக்கை விடுத்தார்.

* இந்துமாக்கடலை அமைதி மண்டலமாக்க வேண்டும் என்று ஐ. நா. வின் பொதுச்சபை பிரகடனம் என்ற வேண்டுகோளை 1970 ஆம் ஆண்டு கூட்டுச்சேரா நாடுகளின் லுகாகா மாநாட்டில் இலங்கையின் சார்பில் அதன் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா விடுத்தார்.

* திருமதி பண்டாரநாயக்காவின் இந்த பிரேரணையை அப்போது இலங்கையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜெயவர்த்தனே கடுமையாக எதிர்த்து வந்தார்.

* 1974 ஆம் ஆண்டு காமன்வெல்த் அமைப்பின் நாடாளுமன்ற மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவரான ஜெயவர்த்தனே பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவின் பிரேரணையைக் கடுமையாக ஆட்சேபித்தார்.

* 1977 இல் ஜெயவர்த்தனே ஆட்சிக்கு வருகிறார். அதற்குப் பிறகு இலங்கையிலும் இந்துமாக்கடலிலும் அமெரிக்காவின் ஆதிக்கம் வேகமாகப் பரவி, பலம்பெற்று வருகிறது.

## இந்துமாக்கடலின் முக்கியத்துவம்

இந்துமாக்கடலில் இந்தியாவுக்கு வரலாற்றுப்பூர்வமாக சம்பந்தம் உள்ளது. உலக வரலாற்றை நாம் பார்க்கிறபோது, இந்துமாக்கடலில் யார் ஆதிக்கம் செலுத்துகிறார்களோ அவர்கள் உலகத்தை ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.

பாய்மரக் கப்பல் இருந்த காலம் வேறு, விஞ்ஞானம் வளர்ந்து நீராவியின் உபயோகம் கண்டு பிடிக்கப்பட்டு

நீராவிக் கப்பல்கள் தோன்றிய பிறகு, ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையே மோதல் ஏற்பட்டு, கடைசியாகக் 'கடல்களின் ராணி' என்ற பட்டத்தைப்பெற்று பிரிட்டன் கடல் ஆதிக்கம் செய்தது. இந்துமாக்கடலை ஆதிக்கம் செலுத்தியது. இந்தியாவை அடிமைப்படுத்தியது. அதைப் போன்று இந்துமாக்கடலை ஆதிக்கம் செய்பவர்களால் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் கூட ஆதிக்கத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று இன்றும் நினைக்கிறார்கள்.

JAFFNA ... LIBRARY

அத்தகைய ஏகாதிபத்திய நாடுகளுக்குரிய ஆதிக்கத்தை இப்போது அமெரிக்கா கைப்பற்ற நினைக்கிறது. உலக ஆதிக்கத்தைக் குறிக்கோளாக வைத்து இந்துமாக் கடலில் தன்னுடைய ஆதிக்கத்தை வளப்படுத்தவும், ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் இயற்கை வளத்தைத் தன்னுடைய சுரண்டலுக்கும், மேற்கத்திய நாடுகளுக்கு ஆதரவாகவும், அரபு நாடுகளுக்கு இருக்கக்கூடிய எண்ணெய் வளத்தை இஷ்டப்படி கொண்டு செல்வதற்கும், பயன்படுத்துவதற்கும்தான் இந்துமாக்கடல் பகுதியைத் தனக்குத் தேவையான கேந்திரப் பகுதி என்று அமெரிக்கா கூறுகிறது, இங்கிருந்து 6000 மைல்களுக்கு அப்பால் அமெரிக்கா இருக்கிறது. இங்கே எதற்கு அதற்கு அவசியமான பிரதேசம்? எதற்காக ஆயுதங்களைக் கொண்டு வந்து குவித்துக் கொண்டிக்கிறது?

இதை எதிர்த்து சோவியத் யூனியன் உட்பட பல நாடுகள் ஒன்று சேர்ந்து இந்துமாக்கடலை அமைதி மண்டலமாக்க வேண்டுமென்று கோரின. இந்தியாவும் இலங்கையும் இதை வலியுறுத்தின. இந்தக் கோரிக்கையை 1974 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக் கொண்டு அந்த மாநாட்டைக் கொழும்பில் கூட்டுவது என்று முடிவு செய்தது.

இந்த முடிவு மேற்கொள்ளப்பட்ட பிறகுதான் ஜெயவர்த்தனேயின் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி

ஆட்சிக்கு வந்தது. இந்த ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு இந்த மாநாடு நடைபெறும் முயற்சியே சீர் குலைக்கப் பட்டு வருகிறது.

இந்துமாக் கடலை அமைதி மண்டலமாக்கக் கோரும் இந்த மாநாடு நடைபெறாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? இந்தியாவுச்கும் இலங்கைக்கும் இடையே ஒரு பதட்ட நிலை இருந்தால்தான் அது சாத்தியமாகும்: எனவேதான் இலங்கைத் தமிழர்கள் மீது மட்டுமின்றி தமிழ் நாட்டு மீனவர்களையும் அவர்கள் தாக்கி ஆத்திர மூட்டி வருகிறார்கள்.

1983ஆம் ஆண்டு மார்ச் மாதம் புதுடில்லியில் நடந்த அணி சேரா நாடுகளின் ஏழாவது உச்சி மாநாட்டில் இந்து மாக்கடலை அமைதி மண்டலமாக்க வேண்டும் என்ற தீர்மானம் மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

**இந்தியா மற்றும் சமாதானத்தை விரும்புகிற நாடுகள், யுத்தத்தை எதிர்க்கிற நாடுகள், சோவியத் யூனியன் உட்பட சோஷலிஸ்ட் நாடுகள் ஆகியனை அனைத்தும் இக்கோரிக் கையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.**

மத்திய அமெரிக்காவில் தொடங்கி அட்லாண்டிக் கடல், இந்துமாக் கடல், பசிபிக் கடல் வரைக்கும் ஒரு இணைப்பாக உலக ஆதிக்கத்திற்குத் திட்டமிட்டுச் செய லாற்றி வரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பேராசைக்கு இந்தியாவும்' அதன் வெளிநாட்டுக் கொள்கையும், சமா தானக் கொள்கையும், இடையூறாக இருந்து வருகின்றன. எனவே இந்தியாவைத் தன்து எதிரியாகவே மறைமுகமாக அமெரிக்கா கருதுகிறது. இதை உணரத் தவறினால், இந்தியாவுக்கு வருகிற அபாயத்தை முறியடித்து நமது சுதந்திரத்தையே நம்மால் பாதுகாக்க முடியாது. நமது நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்பதையும் அடை யாளம் காண இயலாது.

எனவேதான் இது மீன் பிடிக்கச் செல்கிற சண்டை யல்ல என்று நாம கூறுகிறோம். இலங்கையில் பதட்ட நிலையை நீடிக்கச் செய்ய வேண்டும. அவசர கால நிலை தொடர்ந்து அமலில் இருக்க வேண்டும். இப்படி தொடர்ந்து இருந்தால்தான் இந்துமாக்கடல் சம்பந்த மான மாநாடு நடத்தப்பட வேண்டும் என்கிற கோரிக்கை எழாது. அப்படியொரு பதட்டநிலை இருந்தால்தான் வெளிநாட்டு ஆயுதங்களைக் கொண்டுவந்து குவித்துக் கொள்ள முடியும்.

ஏராளமான ஆயுதங்கள் அங்கே இருக்கின்றன என் பதற்குரிய சான்றுகளைத் தேட வேண்டிய அவசியம் நமக்கு இல்லை. அவர்களே சான்றுகளைக் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போகிறார்கள. பெட்ரோல் இல்லாத காரணத்தால் திருவனந்தபுரத்தில் சமீபத்தில் இறங்கிய விமானத்தில் இருந்த போர்த்துக்கல் ஆயுதங் களே அதற்குப் போதிய சான்றாகும். இவ்வாறு அந்த நாட்டினுடைய தேவைக்கு அதிகமான ஆயுதங்கள் அங்கே குவிக்கப்படுகின்றன. அமெரிக்காவின் ஆதரவோடு இஸ்ரேல் நிபுணர்கள் அங்கே சென்ற பயிற்சி அளிக்கிறார் கள். பிரிட்டன் தன்னுடைய கூலிக் கொலைப் படைகளை இலங்கைக்கு அனுப்பி வைக்கிறது. திரிகோணமலையைத் தளமாக்கிக் கொள்ள மறைமுகமான ஏற்பாடுகளெல்லாம் நிறைந்து விட்டன

## அமெரிக்காவிற்கு அளிக்கப்பட்ட சலுகை

வாய்ஸ் ஆப் அமெரிக்கா இலங்கையில் ஓர் ஒலிபரப்பு நிலையத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அமெரிக்காவானது தனது நாட்டிற்கு வெளியே வைத்திருக்கக் கூடிய எல்லா வானொலி நிலையங்களைக் காட்டிலும் இலங்கையில் உள்ள வாய்ஸ் ஆப் அமெரிக்கா அதிக சக்திவாய்ந்ததாகும். இந்த ஒலிப்பரப்பு நிலையத்தின்மீது அதன் செய்தித்துறை யின் மீது கூட இலங்கை எத்தகைய கட்டுப்பாடும் விதிக்க முடியாத வகையில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. இது

வெறும் ஒலிப்பரப்பு நிலையம் மட்டுமல்ல. வேவு பார்க்கும் நிலையமாகவும் விளங்குவதாக பல விபரங்கள் வெளி வந்துள்ளன. இந்துமாக் கடலில் டிகோகார்சியா தீவிற் கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையில் உள்ள அகன்ற கடல் பகுதியையும், இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பு அமைப்பையும் வேவு பார்க்கக் கூடிய சக்தி இலங்கையில் நிறுவப்பட்டுள்ள வாய்ஸ் ஆப் அமெரிக்காவிற்கு உண்டு என்று அமெரிக்காவின் பாதுகாப்பு நிபுணர்களே திருப்தி கொள்வதாக பத்திரிகைகள் எழுதுகின்றன.

இனக் கலவரத்தைக் காரணமாகக் காட்டி இத்தகைய ஏகாதிபத்தியத்திற்கு பாதை செப்பனிட்டுத் தரும் பணியை இலங்கை செய்துகொண்டிருக்கிறது. இலங்கையில் ராணு வமும் இன்றைக்கு கட்டுக்கடங்காத நிலையில் ஒழுங்கீனங் களையும், மிலேச்சத்தனமான காரியங்களையும் தமிழ் மக்களுக்கு எதிராகச் செய்து வருகிறது.

உலகத்தில் இனக் கலவரங்கள் நடைபெறுகின்ற முக்கி யமான இடங்கள் ஒன்று தென் ஆப்பிரிக்கா. இன் னொன்று பாலஸ்தீன மக்களுக்கு எதிராக,அரபு மக்களுக்கு எதிராக இஸ்ரேலிய அரசு செய்துவரும் கொடுமைகள். ஜெயவர்த்தனே ஈழத்துத் தமிழர்களுக்கு எதிராக நடத்து கின்ற இனப் படுகொலையோ இந்தக் கொடுமைகளை யெல்லாம் மிஞ்சியதாகும். இது **இனப் படுகொலை என்ற நிலைமாறி இன ஒழிப்பாக மாறி விட்டது.**

## சொந்த மண்ணில் வாழ்வதற்கான போராட்டம் ஏகாதிபத்தியத்தின் கனவுகள் பலிக்காது

ஈழத்துக் கரையில் இருக்கக் கூடிய 30 லட்சம் தமிழர் களை அடித்து நொறுக்கி வெளியேற்றி இந்தியாவிற்கு அக திகளாக அனுப்பி விட்டு அங்கே சிங்களர்களை குடியமர்த் துகிறார்கள். தமிழர்களுடைய முதுகெலும்பை முறிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடும், இலங்கைத் தீவு

அனைத்தையுமே அமெரிக்காவினுடைய தளமாக எதிர்ப்பின்றி பயன்படுத்தலாம் என்ற நோக்கத்தோடு இக்காரியங்கள் செயல்படுகின்றன. ஆனால் இலங்கை ஆட்சியாளர்களின் மனக் கோட்டையே இது. ஏகாதிபத்தியத்தின் இக்கனவுகள் பலிக்காது.

இலங்கை ஆட்சியாளர்களின் இந் நடவடிக்கைகளை சிங்கள மக்களே எதிர்த்து நிற்பார்கள் என்பதற்கு இப்பொழுதிருந்தே அடையாளங்கள் தோன்றுகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர மற்ற கட்சிகள் அனைத்தும் எவ்வளவு பலவீனமாக இருந்தாலும் ஜெயவர்த்தனேயின் ஏகாதிபத்திய ஆதரவு நடவடிக்கைகளை தங்கள் சக்திக்கேற்ப எதிர்த்து சிங்கள மக்களைத் திரட்டி வருகின்றனர்.

## வெண்ணெயும் சுண்ணும்பும் ஒன்றல்ல

**காலிஸ்தான் கோரிக்கையை வைத்துக் கொண்டு பொற் கோயிலில் தஞ்சம் புகுந்த பயங்கர வாதிகளோடு இலங்கைத் தமிழ் இளைஞர்களை ஒப்பிடுவது தவறானது. சுண்ணும்பும் வெண்ணெயும் வெண்மையாக இருக்கிற காரணத்தால் இரண்டும் ஒன்று என்று நினைப்பதைப் போன்ற விபரீதம் இது.**

இலங்கையின் ராணுவ பயங்கர நடவடிக்கையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்குப் போராடுகிறவர்களை பயங்கரவாதிகள் என்று கூறலாமா? அல்லது ராணுவக் கொடுமையிலிருந்து மக்களைப்பாதுக்காக்கப் பாடுபடுகிற போர் வீரர்கள் என்று கூறுவதா? இவர்கள் எப்படி பயங்கரவதிகள் ஆவார்கள்?

ஆனால் பஞ்சாபிலே நடத்தது என்ன? காலிஸ்தான்பிரிவினை வேண்டும்என்பதற்காக, ஏகாதிபத்தியம் கொடுத்த ஆயுதங்களை வைத்துக் கொண்டு வெளிநாட்டு உதவியோடு பொற்கோயிலில் தஞ்சம் புகுந்து கலவரம் செய்த

பயங்கரவாதம்தான் இங்கே நடந்தது. காலிஸ்தான் பிரி வினைவாத பயங்கர வாதிகளின் போராட்டமும் இலங் கைத் தமிழர்களின் போராட்டமும் ஒன்று என்று நினைப் பது எவ்வளவு பொருத்தமற்றது என்பதை நம்முடைய மக்கள் சிந்திக்க வேண்டும். இரண்டுக்கும் இடையே ஒரு பொருத்தம் உண்டு. இந்தியாவில் உள்ள காலிஸ்தான் தீவிரவாதிகளுக்குப் பின்னால் இருப்பதும் அமெரிக்கா ஏகாதிபத்தியம்தான். இன்னும் ஒருபடி மேலே சொல்ல வேண்டுமானால் ஈழத்துத் தமிழர்களுடைய போராட்டம் இந்தியாவின் பாதுகாப்பிற்கான போராட்டம் என்று கூடக் கூறலாம்.

ஈழத் தமிழர்களைத் தாழ்த்தினால்— அடக்கி ஒடுக்கி னால்— அடித்துக் கொன்றால் அதனுடைய எதிரொலி இந்தியாவில் ஏற்படும். அப்பொழுது இந்தியாவை ஒரு காரணமாகக் காட்டி அமெரிக்க ஆயுதங்களைப் பெறுவ தற்கும், தனது ராணுவ பலத்தை பெருக்கிக் கொள்வதற் கும் இலங்கை ஆட்சியாளர்கள் நடத்தும் சூழ்ச்சி. அதே சமயத்தில் பொளாதார நெருக்கடியைக் காண்பித்து, சிங் கள மக்களையும் அடக்குவதற்கு இதைப் பயன்படுத்த் முடியும். எனவே இந்த பதட்ட நிலை ஏகாதிபத்திய சார் புடைய ஜெயவர்த்தனே அரசுக்கு முழுக்க முழுக்கத் தேவைப்படுகிறது.

இப்பொழுதோ நிலமை எப்படி ஆகிவிட்டதென் றால் ஈழம் கேட்டுக் கொண்டிருக்கும் கோரிக்கை நடை முறையில்வந்துள்ளதைப்போலநிகழ்ச்சிகள் நடக்கின்றன. ராணுவத்தை வைத்துத்தான் இங்கு ஆட்சி நடத்த முடி யும். வேறு போக்குவரத்துக்குக்கூட அங்கு அனுமதிப்ப தில்லை. யாராவது சிங்கள மக்களின் பகுதிகளுக்குச் செல்ல வேண்டுமானால் அனுமதிச் சீட்டு வாங்கிச் செல்ல வேண்டும். ஆக இப்போதே இலங்கையை ஜெய வர்த்தனே இரண்டாக பிரித்து விட்டதாகத் தெரிகிறது.

327.5405493
AR/PB

## மீனவர்களின் முடிவு

இதன் காரணமாகத்தான் இந்தியா எடுத்த நல்லெண்ண முயற்சிகளையெல்லாம் முறியடித்து விட்டு— சர்வ கட்சி மாநாட்டையும் கவிழ்த்து விட்டு— அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்றவர்களைக் கூட புறக்கணித்து விட்டு இனப் படுகொலையை இலங்கை அரசு இன்னும் தீவிரமாக்கியுள்ளது. அதன் விஸ்தரிப்புதான் பாக் கடலில் நடக்கிற நிகழ்ச்சிகள்.

பாக் கடலில் இராமேஸ்வரத்தை ஒட்டியுள்ள பிரச்சினை இது என்று நாம் நினைக்க வேண்டாம். இதன் விளைவு என்ன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். பாக் கடலில் இலங்கை ராணுவம் கொடுக்கும் தாக்குதலால் அநேகமாக இங்கே கிட்டதட்ட 5 லட்சம் மீனவர்கள் வேலை இழந்து கஷ்டப்படக்கூடிய நிலமை ஏற்பட்டுள்ளது. நம்முடைய அன்னியச் செலாவணியில் கூட இழப்பை ஏற்படுத்தக் கூடியது.

நாம் கச்சத்தீவு வரைக்கும் செல்வதற்கு - நமக்கு உரிமை உண்டா இல்லையா என்பதை நிலை நாட்ட வேண்டியது ஒரு முக்கியமான போர்க் கோஷமாகி விட்டது. அது மீனவர்களது போர் முழக்கம் என்று மட்டும் நினைக்க வேண்டாம். தேசபக்தி உள்ள மீனவர்கள் கட்சி வேறுபாடு இன்றி அனைவரும் ஒன்றுசேர்ந்து இராமேஸ்வரத்தில் ஒரு முடிவெடுத்திருக்கின்றனர்.

கச்சத்தீவு வரைக்கும் சென்று நம்முடைய உரிமையை நிலைநாட்ட வேண்டும். அதற்கான ஒரு படகுப் பேரணி நடத்த வேண்டும் என்று தீர்மானித்திருக்கின்றனர், உண்மையில் இது வரவேற்க வேண்டிய ஒரு முடிவு.

நம்முடைய சுதந்திரப் போராட்டக் காலத்தில் எப்படி சாத்வீக முறையில் சட்ட மறுப்பு இயக்கமும் சத்தியாக்கிரகமும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்தினோமோ அதே போன்று, ஏகாதிபத்திய சூழ்ச்சியின்

ARCHIVES

காரணமாக இந்தியாவுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ள ஜெயவர்த்தனேயின் ராணுவ சர்வாதிகார நடவடிக்கையை எதிர்த்துக் கண்டிக்கவும், உலகத்தின் கவனத்தை ஈர்க்கவும் இந்த படகுப் பேரணி பயன்படும்.

**பாக் கடலில் இருந்து இலங்கையின் ரோந்துப் படைகளை வெளியேற்ற வேண்டும் என்கிற கோரிக்கை, அமைதியை விரும்புகிற கோரிக்கையாகும்.** பாக் கடலில் ரோந்து என்ற பெயரால் ஈழத்துத் தமிழர்களை அழிப்பதற்கு கடல் மார்க்கத்திலிருந்து இரு முனை கிடுக்கித் தாக்குதல்கள் நடைபெறுகின்றன. இத்தகைய தாக்குதலுக்காகத்தான் ஜெயவர்த்தனேயின் ஆட்சி நம்முடைய கடல் பகுதியை 74 ஒப்பந்தத்திற்கு மாறாக ஒருதலைப்பட்சமாகத் தன்வசப் படுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்தியாவின் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் காப்பாற்றுவதற்கான நடவடிக்கையில் ஓர் அம்சமாகவே மீனவர் சங்கங்கள் ஒன்று சேர்ந்து எடுத்திருக்கும் இந்த நடவடிக்கை விளங்குகிறது.

கத்தியின்றி ரத்தமின்றியுத்தமொன்று வருகுது என்று நமது சுதந்திரப் போராட்ட காலத்தில் போராடிய தலைவர்கள் போர்ப் பரணி பாடியதைப் போன்று, நம்முடைய ராமேஸ்வரம் மீனவர்கள் சாத்வீக முறையில் எவ்வித ஆயுதமும் இன்றி ஜெயவர்த்தனே அரசின் மிருகத்தனமான தாக்குதலை எதிர்த்து நின்று போராடுகிறார்கள். இந்திய அரசு என்ன செய்யும்? இவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கப் போகிறதா? அல்லது இலங்கையின் தொடர் தாக்குதலை அனுமதிக்கப் போகிறதா?

நம்முடைய கடற்படையே நம்முடைய மக்களைக் கொல்ல முடியாது. இத்தகைய மிருகத்தனத்தை இலங்கை ராணுவம்தான் செய்ய முடியும். இவ்வாறு இலங்கைக் கடற்படையினால் நம்முடைய மக்கள் கொல்லப்படுவதை இந்திய அரசு அனுமதிக்கவே கூடாது.

## அகதிகள் பிரச்சினையும் இந்திய அரசின் கடமையும்

தற்போது அகதிகளாக ஆயிரக்கணக்கில் இங்கே வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த அகதிப் பிரச்சினையை சமாளிப்பது அவ்வளவு சுலபமல்ல. இந்த அகதிகளையெல்லாம் மீண்டும் கௌரவத்தோடும், உரிமையோடும், ஆதிபத்தியத்தோடும் ஈழத்திலேயே குடியமர்த்த வேண்டிய பொறுப்பு இந்தியாவையே சாரும்.

பாக் கடலில் நம்முடைய உரிமையைப் பாதுகாக்க வேண்டியதும், ஈழத்துப் பகுதியிலே இந்த அகதிகள் சென்று குடியேறுவதில் உள்ள பாதுகாப்பைத் தேடிக் கொடுக்க வேண்டிய சர்வதேசக் கடமையும் இந்திய அரசுக்கு உண்டு.

இந்த அடிப்படையில் இந்தியாவில் இருக்கக் கூடிய சகல ஜனநாயக சக்திகளும், ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளும் ஒன்று சேர்ந்து போராடி அகதிகளைக் குடியமர்த்த வேண்டியதும், எப்படி பாலஸ்தீன மக்கள் தனி இடம் கேட்கிறார்களோ அப்படி ஈழத் தமிழர்களுக்கும் அவர்களுக்கு உரிய இடத்தில் குடியேற்ற வேண்டும் என்பதும் ஒரு உலகப் பிரச்சினை ஆகி விட்டது.

அதேபோல் இந்தியாவில் வந்து குடியேறியிருக்கும் அகதிகள் ஆயிரம் பேர் அவர்களுடைய பிறந்த மண்ணுக்குச் சென்று வாழ்க்கை நடத்தும் உரிமையைப் பாதுகாக்க வேண்டியது மனித உரிமையில் அக்கறை உள்ள அனைத்து நாடுகளின் கடமையாகும்.

இந்தியாவின் கடல் பகுதி இலங்கையின் தெற்கே உள்ளது. தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு வரக்கூடிய கப்பல்கள் கூட, இலங்கையை சுற்றித்தான் வரவேண்டும். மேற்குக்கரையிலிருந்து கிழக்குக்கரைக்கு வரக்கூடிய கப்பல்

களும், கொச்சியிலிருந்து வரக் கூடிய கப்பல்கள் உட்பட இலங்கையை சுற்றித்தான் வரவேண்டும்.

இலங்கையை சுற்றி வரக்கூடிய கடல் மார்க்கமானது ஆயிரமாயிரம் ஆண்டு காலமாக நமக்கு இருந்து வரக் கூடிய இந்தியக் கடல் மார்க்கமாகும்.

நம்முடைய கடல் மார்க்கத்திற்கும் நமது கடற்கரைக்கும் இடையிலே இலங்கை ஏராளமான ஆயுதங்களைக் குவித்துக் கொண்டிருக்கிறது. மேற்கே பாகிஸ்தான், கிழக்கே பங்களாதேஷ், தெற்கே இலங்கை...இப்படி நமது நாட்டைச் சுற்றியுள்ள ஏகாதிபத்திய நெருக்கல் நடவடிக்கைகளில் ஒன்றுதான் - தமிழர்கள் மீதும் நமது மீனவர்கள் மீதும் இலங்கை தொடுக்கும் தாக்குதல், நமக்கு எதிராக படைகளையும் ஆயுதங்களையும் குவித்து வருவதும் இந்த நெருக்கல் நடவடிக்கைகளில் ஒன்றே. இந்த விபரங்களைப் புரிந்து கொண்டு இதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டியது, மத்திய மாநில அரசுகளின் கடமையாகும். தமிழர்களுச்குப் பாடுபடுவதாகக் கூறுகிற அர்சியல் கட்சிகளின் கடமையாகும்,

இலங்கை ஒரு சிறிய நாடு. நம்முடைய நட்புக்கு உரியநாடு. அவர்களுடைய வளர்ச்சி நம்முடைய வளர்ச்சி. நமக்கு இலங்கை மீது ஆத்திரம் வரவேண்டிய காரணமே எந்த வகையிலும் இல்லை.

அவர்கள் செல்வத்தை நாம் சுரண்டவில்லை. நம்முடைய செல்வத்தை அவர்கள் சுரண்டவில்லை. நமக்கும் அவர்களுக்கும் பொருளாதாரத் துறையில் போட்டி கிடையாது. ஒத்துழைக்க வேண்டிய அவசியம்தான் எல்லாவகையிலும் உண்டு. பாக் கடலில் மட்டுமல்ல. மன்னார்வளைகுடாவில் மட்டுமல்ல. இந்துமாக் கடலில் இருக்கக் கூடிய இயற்கை வளங்களைப் பயன்படுத்தி இரண்டு நாடுகளும் பரஸ்பரமாய் ஒத்துழைப்பதன் மூலம்

OF JAFFNA

இரண்டு நாடுகளுக்கும எவ்வளவோ நன்மை கிடைத்திருக்கும்.

ஆனால் 20 மைல் தூரத்தில் உள்ள இந்தியா மீது பகைமை பாராட்டி, 6000 மைல்களுக்கு அப்பால் உள்ள அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சதி வலையிலே சிக்கி ஜெயவர்த்தனே அரசு இந்தியாவுக்கு எதிராக இலங்கையில் சிங்கள மக்களைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறது. இது அந்த நாட்டுக்கு நல்லதல்ல. இந்தப் பகுதியின் அமைதிக்கும நல்லதல்ல. ஆகவே நமது ஆத்திரம் ஜெயவர்த்தனே அரசு மீது மட்டுமின்றி, இதற்குப் பின்னணியாக இருக்கக் கூடிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மீதுதான் எழுகிறது.

சமீபத்தில் இலங்கை அமைச்சர்கள் அமெரிக்காவிற்குச் சென்றார்கள். பிரான்சுக்குச் சென்றார்கள். பிரிட்டனுக்குச் சென்றார்கள். இப் பயணங்கள் ஆயுதங்களை சேகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டன. இந்தியா இலங்கை மீது படையெடுக்கப் போகிறது என்ற போலிக் காரணத்தைச் சொல்லி, இவ்வாறு ஆயுதங்களைக் குவித்துக் கொண்டு வருகிறார்கள்.

## மக்களைத் திரட்டுவோம்

இந்தியாவுக்கு நம்முடைய எல்லையிலே 20 மைல் தூரத்தில் அமைதியைப் பாதுகாக்க வேண்டியதும் அங்கு நமக்கு எதிரான சக்திகள் ஆயுதங்ளைைக் குவிப்பதைத் தடுக்க வேண்டியதும் இந்தியாவினுடைய கடமையாகும். இந்தியாவினுடைய ஆபத்தை இந்தியாவே கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவே இந்தியாவுக்கு ஒரு தார்மீகக் கடமையல்ல. வெறும் மனிதாபிமானக் கடமை மட்டுமல்ல. மக்களைத் திரட்ட வேண்டிய கடமையும் இருக்கிறது. இதில் கட்சிப் போட்டிகளுக்கு இடம் கொடுத்துவிடக் கூடாது. இதைக் காண்

UNIVERSITY OF JAFFNA LIBRARY

பித்து தமிழர் இனவெறியைத் தூண்டிவிடுவதையோ அல்லது தமிழர்களைப் பாதுகாக்க டில்லி அரசு தவறி விட்டது என்று கூறி குறுகிய அரசியல் நோக்கத்திற்கு பயன்படுத்துவதையோ விட்டு விட்டு, நாம் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளை திரட்ட வேண்டும. உண்மையான எதிரிகளை மக்களுக்கு அடையாளம் காட்ட வேண்டும்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலக ஆதிக்கக் கொள்கையே இந்த நிலைமைக்கு அடிப்படைக் காரணம். அமெரிக்க ஏகாதிபத்தியம் விலகி நிற்குமேயானால், ஜெயவர்த்தனே அரசுக்கு இந்தத் துணிச்சல் வராது. கடல் தாண்டி வந்து மீனவர்களைத் தாக்குவதற்கு - இந்தியாவுக்கு ஆத்திர மூட்டுவதற்குள்ள துணிச்சல் எங்கிருந்து வந்தது?

எனவே அமெரிக்கா சற்று விலகி இருக்கட்டும. அமெரிக்கா இந்துமாக் கடலிலிருந்து வெளியேற வேண்டும் என்பது எவ்வளவு உடனடி அவசியமாகிறது என்பதை இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டும.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் ஒரு தொடக்கம்தான் நமது ராமேஸ்வரம் மீனவர்கள் நடத்தும் படகுப் பேரணி. வேதாரண்யத்தில் நடந்த ராஜாஜியின் உப்பு சத்தியாகிரகத்தைப் போல-காந்திஜியின் தண்டி யாத்திரையைப் போல நடைபெறும் இந்தப் போராட்டம் நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்கக் கூடிய உன்னத ஏகாதிபத்திய எதிர்ப்பு லட்சியத்தைக் கொண்டதாகும்.

அந்தப் படகுப் பேரணிக்கு தமிழ் நாட்டு மக்களை மட்டுமல்ல, இந்திய மக்களின் பேராதரவையும் திரட்டியாக வேண்டும. இந்திய அரசு தலையிட்டு நமது எல்லையின் உரிமையைப் பாதுகாக்கக கூடிய இந்த நடவடிக்கை வெற்றி பெற நமது முழு சக்தியையும் உழைப்பையும் பயன்படுத்த வேண்டியது அவசியமானது என்று அனைத்து மக்களையும் அனைத்து கட்சிகளையும் அறைகூவி அழைக்கிறோம்.

ARCHIVES




இலங்கைத்தீவில் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது
கறைபடிந்த பாதத்தடங்களைப் பதித்துவிட்டது.

சோவியத் யூனியனால் ஆபத்து என்று பூச்சாண்டி காட்டி
அந்தப் புனித நாட்டின்மீது புழுதிவாரித் தூற்றி
அழிவாயுதங்களை அபரிமிதமாக உற்பத்திசெய்து குவிக்கும்
அமெரிக்கக் கொலைக்கும்பல்
இந்தியாவால், இலங்கைக்கு ஆபத்து என்ற
புரளியைக் கிளப்பி தனது மேலாதிக்கக் கூட்டாளிகளுடன்
இலங்கைத் தீவில் தளம் கண்டுள்ளது.

இந்த நிலையில்-
ஏகாதிபத்திய சார்புள்ள சிறீலங்கா பேரினவாத அரசுக்கு எதிராகவும்
அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும், அதன் ஏவல்நாய்களுக்கும்
எதிராகவும் கரங்களில் ஆயுதம் தாங்கிக் களத்துமேட்டில் அணிவகுக்கும்
ஈழ மக்களின் புரட்சிகர விடுதலைப் போராட்டம்
உலக முற்போக்கு, ஜனநாயக சக்திகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

ஈழ மக்களின் போராட்டத்தையும், இந்திய உபகண்ட பாதுகாப்புடன்
அது பின்னிப் பிணைந்திருப்பதையும்
தோழர் எம். கே. வெளிச்சமிட்டுக் காட்டுகிறார்



**சிவா பதிப்பகம்**